## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தேவகோட்டை

O.S.No.3/2025

| | | |
|---|---|---|
| வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி | : | வாசா.2 |
| பெயர் | : | அஞ்சலைதேவி |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | துரை |
| தொழில் | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 18 ம் நாள் புதன்கிழமை 1872ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி பெஞ்சு கிளார்க் திரு.ரா.நாகநாதன் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கின் 3-ம் தரப்பினர் ஆவேன். வாதி தரப்பு 2வது சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியை எழுத்துமூலமாக நிரூபணவாக்குமூலத்தின் பேரில் நீதிமன்றத்தில் சமர்பிக்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பில் ஆவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

**2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. தாவா வழக்கில் நான் தரப்பினராக உள்ளேனா என்றால் உள்ளேன். நான் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது அம்மாவின் சொத்தை வேறு ஒருவர் மோசடியாக பெயர் மாற்றம் செய்து

வைத்துள்ளார், அதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து எங்கு அமைந்துள்ளது என்றால் களிப்புலி கிராமத்தில் உள்ளது. தாவாசொத்தின் சர்வே எண் 104/5 ஆகும். தாவா சொத்தின் மொத்த அளவு என்ன என்றால் 82 சென்ட் ஆகும். தாவா வழக்கின் 1ம் பிரதிவாதியை எதற்காக தரப்பினராக சேர்த்து உள்ளேன் என்றால், எனது அம்மா பெயரில் உள்ள சொத்தை அவரது பெயரை மாற்றம் செய்து வைத்துள்ளார், அதனால் அவரை பிரதிவாதியாக சேர்த்து உள்ளேன். தாவா சொத்து தற்போது யார் பெயரில் உள்ளது என்றால் 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது, அவர் மாற்றம் செய்து வைத்துள்ளார். தாவா சொத்து 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்று எனக்கு எப்பொழுது தெரிய வந்தது என்றால், 2024 ஆம் ஆண்டு தெரிய வந்தது.

2. தாவா சொத்து என் தாயாருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் என் தாயாரின் தந்தை அவருக்கு எழுதிக் கொடுத்தது ஆகும். எனது தாயாரின் தந்தை எழுதி கொடுத்த ஆவணம் பதிவு செய்யப்பட்டதா என்றால், பதிவு செய்யப்பட்டது தான். மேற்படி ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்து உள்ளேனா என்றால் சமர்ப்பித்துள்ளேன். தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் பெயரில் மாற்றம் செய்யபட்டப்பிறகு 2ம் பிரதிவாதியிடம் மனு அல்லது வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். 2ம் பிரதிவாதி அலுவலகத்தில் இருந்து எனக்கு

என்ன பதில் வந்தது என்றால், உரிய நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் தேடி கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டது. தாவா சொத்து 1ம் பிரதிவாதியின் பெயரில் மாற்றப்பட்டதற்கான ஆவணங்களின் சான்றிட்ட நகலை எடுத்து நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன்.

3. மேற்படி தாவா சொத்து சம்பந்தமாக 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட ஆவணம் பதிவு செய்யப்பட்டதா அல்லது பதிவு செய்யப்படாததா என்றால் பதிவு செய்யப்பட்ட ஆவணம். மேற்படி ஆவணத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன், அதில் 1ம் பிரதிவாதி யாரிடமிருந்து கிரையம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், எனது தந்தை மற்றும் தாயாரிடம் இருந்து கிரையம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் அவர்கள் அதை விற்கவில்லை. மேற்படி ஆவணம் எந்த ஆண்டு ஏற்படுத்தப்பட்டது என்றால் 2011 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும் 2ம் பிரதிவாதியின் செலவு தொகையுடன் தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றும் சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

1 ம் பிரதிவாதி தரப்பில் யாரும் ஆஜரராகததால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.03.18 16:08:08 +0530